



Google வழி விளம்பரங்கள் poken english Learn telugu Urdu books

# மீள்பதிவிடுவோர் கவனத்திற்கு




இந்த "ஆங்கிலம்" வலைத்தளத்தில் எழுதுபவை; நாம் மற்றத் தளங்களில் எழுதுவது போலன்றி அதிக நேரத்தை செலவிட்டே ஒவ்வொரு பதிவையும் பதிவிடப்படுகின்றது. இவை ஆங்கில இலக்கணம் சார்ந்த பதிவுகள் என்பதால் கூடுதல் கவனத்துடன் பதிவேற்றப்படுகின்றன. இதன் மூலம் எமக்கு கிடைக்கப் பெறுவது; இன்றைய தொழில் நுட்ப உலகில், ஆங்கில மொழி அத்தியாவசியம் ஆகிவிட்ட நிலையில், அதனை கற்க விரும்பும் ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்கும் எம்மால் இயன்ற இச்சிறு பணியை செய்ய வாய்ப்பு கிட்டியுள்ளது எனும் ஆத்ம திருப்தியும், ஆங்கில மொழி கல்வியின் அவசியம் உணர்ந்து அதிகரித்து வரும் வருகையாளர்களின் எண்ணிக்கை தரும் மனநிறைவும் ஆகும்.

ஆனால் தொடர்ந்து நடைப்பெற்று வரும் சிலரது செயல்பாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

இத்தளத்தின் பதிவுகள் பதிவுகளாகவே அல்லாமல் பாடங்களாக இருப்பதனால்; இதன் பயன்பாடு பலரையும் சென்றடைட வேண்டும் எனும் நன்நோக்கின் அடிப்படையில் சக வலைப்பதிவர்கள், இணையத்தளத்தினர், மன்றத்தினர், குழுமத்தினர் என பலரும் இத்தளத்திற்கு இணைப்பு வழங்கி பலரதும் பயன்பாட்டிற்கு கொண்டுசென்றுள்ளனர். அவற்றில் சில தளங்கள் ஒரு பாடத்தை அல்லது ஒரு பாடத்தின் ஒரு பகுதியை மட்டும் இட்டு எமது தளத்திற்கு இணைப்பு வழங்கியிருப்பவற்றையும் காணக்கிடைக்கின்றன. இவை நியாயமான செயல்பாடுகளாகும். சிலர் தங்கள் தளங்களின் ஊடாக பதிவிட்டு இத்தளத்தை மேலும் பலருக்கு அறிவித்தும் வருகின்றவர்களும் உளர். இவர்கள் அனைவருக்கும் நாம் என்றும் நன்றியுடைவனாக இருக்கின்றோம்.

ஆனால் சிலர் இத்தளத்தின் பதிவுகளை எமது அனுமதியும் இன்றி அப்படியே வெட்டி ஒட்டி மீள்பதிவிடுவதை தொடராகவே செய்து வருகின்றனர். இது முற்றிலும் நியாயமற்ற செயல்பாடுகள் ஆகும்.

**நியாயமற்ற செயல்பாடுகள் என நாம் வரையரை செய்வது:**

01. வெட்டி ஒட்டுதல் எனும் நோக்கில் பதிவுகள் சீர்குலைக்கப்படல்.

02. முழுப்பதிவையும் மீள்பதிவிடல்.

03. தளத்தின் பெயர் அல்லது இணைப்பு (URL) கொடுக்கப்படாமல் மீள்பதிவிடல்.

04. மீள்பதிவிடுதல் குறித்து அறியத்தராமல் மீள்பதிவிடல்.




**Subscribe to Aangilam Email**

பாடங்களை மின்னஞ்சல் ஊடாகப் பெறுங்கள்.

Your email address:

Get email updates

Powered by FeedBlitz

11401 email readers BY FEEDBLITZ

6277 readers BY FEEDBURNER

ஆங்கில இலக்கணப் பாடங்கள்

- ஆங்கில பாடப் பயிற்சி 01
- ஆங்கில பாடப் பயிற்சி 02
- ஆங்கில பாடப் பயிற்சி 03
- ஆங்கில பாடப் பயிற்சி 04
- ஆங்கில பாடப் பயிற்சி 05
- ஆங்கில பாடப் பயிற்சி 06
- ஆங்கில பாடப் பயிற்சி 07
- ஆங்கில பாடப் பயிற்சி 08
- ஆங்கில பாடப் பயிற்சி 09

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

05. உள்ளடக்கங்களை திருடி சுயபதிவாக மாற்றியமைத்தல்.

06. தளத்தின் (இணைப்பு வழங்கபட்டிருந்தாலும்) அனைத்து பதிவுகளையும் தொடர்ந்து மீள்பதிவிட்டு வருதல்.

இவ்வாறான செயல்பாடுகள் எமது அதிக நேர உழைப்பு; சிலரின் சில நொடிப் பொழுதின் வெட்டி ஒட்டுதலால் சிதைக்கப்படுவதாகவே நாம் கருதுகின்றோம். தவிர பதிவுகள் சீர்குழைக்கப்படும் வகையில் மீள்பதிவிடுதல் என்பது எவருமே பயன்பெற முடியாத ஒன்றாகும். இதனால் எவருக்கும் எந்த பயனும் இல்லை. சில தளங்கள் **ஓரிரண்டு பதிவுகள் மட்டுமன்றி, ஒட்டுமொத்தமாக அனைத்து பாடப் பயிற்சிகளையுமே மீள்பதிவாக இட்டு வருகின்றன. இவை முற்றிலும் நியாயமற்ற மோசடியான செயல்பாடாகவே நாம் கருதுகிறோம்.** அன்மையில் அதிர்ச்சி அடைய வைத்த ஒரு நிகழ்வும் உண்டு. எமது தளத்தில் பதிவிட்டு சில நிமிடங்களிலேயே அப்பதிவு இன்னொரு தளத்தில் வெட்டி ஒட்டுதல் நடந்தேறியிருந்தது. மேலும் அவ்வலைத்தளத்தைப் பார்வையிட்டதில் எமது தளத்தில் இருக்கும் அனைத்து பதிவுகளும் அங்கேயும் காணப்படுகின்றன. இது முற்றிலும் நியாயமற்றதும் நாகரீகமற்றதுமான செயல்பாடாகும். இன்னும் சில தளங்களில் இப்பதிவுகள் தமது பதிவுகளாக தோற்றம் காட்டுவதும் நடைப்பெற்றுள்ளன. குறிப்பிட்டு காட்டுவதற்கு ஒன்றிரண்டு தளங்கள் என்றல்லாமல் எண்ணற்ற தளங்கள் இப்படித்தான் செய்துள்ளன. இதனை ஒரு வகையில் அறிவு திருட்டு என்றும் கூறலாம். இவை எமது தளத்திற்கான வருகையாளர்களை திசைமாற்றும் செயல்பாடாகவும் மாறிவிடுகிறது. மீள்பதிவிடுவோர் ஓர் ஆர்வத்தின் வெளிப்பாடாக செய்திருந்தாலும் கூட.

எனவே இவ்வாறு செய்த நண்பர்கள், அறியாமல் செய்திருந்தாலோ அல்லது ஆர்வத்தின் வெளிப்பாடாக செய்திருந்தாலோ இதன் பிறகு இவ்வாறு செய்ய வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இவ்வறிவித்தலும் உங்களுக்காகவே விடுக்கப்படுகின்றது.

## அறிவித்தல்

எமது ஆங்கிலம் வலைத்தளத்தின் பாடப் பயிற்சிகளை பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், வலைப்பதிவுகள், கருத்துக்களங்கள், மன்றங்கள் போன்றவற்றில் மீள்பதிவிடுவோர் தயவு செய்து எமது வலைத்தளத்தின் பெயரை **(aangilam.blogspot.com)** கட்டாயம் இட்டே மீள்பதிவிட வேண்டும் என அறியத் தருகின்றோம். அவ்வாறு மீள்பதிவிடுவோர் எமது மின்னஞ்சல் **(arunhk.info AT gmail.com)** ஊடாகவோ அல்லது குறிப்பிட்ட பாடத்தின் பின்னூட்டமாகவோ அறியத் தர வேண்டும். குறிப்பாக இணையத்தில், இப்பாடங்கள் பலருக்கும் பயன்பட வேண்டும் எனும் நன்நோக்குடன் நீங்கள் மீள்பதிவிடுபவராக கருதலாம். அவ்வாறாயின் பாடங்களின் ஒரு பகுதியை மட்டும் இட்டு, எமது தளத்திற்கு இணைப்பு வழங்குங்கள். **தயவு செய்து முழுப் பாடங்களையும் அப்படியே வெட்டி ஒட்டுவதைத் தவிர்க்கவும்.**

நன்றி

அன்புடன் அருண் HK Arun Download As PDF

+ 1

Posted by HK Arun at Friday, August 14, 2009

Labels: ஆங்கில ஆக்கங்கள்

## 19 comments:

**Arul said...**

you can install a javascript widjet to disable right mouse click ... or crate a license from here
http://creativecommons.org/choose/
. keep posting.. i am regular reader of ur blog...

September 25, 2009 at 11:19 PM


- ஆங்கில பாடப் பயிற்சி 10
- ஆங்கில பாடப் பயிற்சி 11
- ஆங்கில பாடப் பயிற்சி 12
- ஆங்கில பாடப் பயிற்சி 13
- ஆங்கில பாடப் பயிற்சி 14
- ஆங்கில பாடப் பயிற்சி 15
- ஆங்கில பாடப் பயிற்சி 16
- ஆங்கில பாடப் பயிற்சி 17
- ஆங்கில பாடப் பயிற்சி 18
- ஆங்கில பாடப் பயிற்சி 19
- ஆங்கில பாடப் பயிற்சி 20
- ஆங்கில பாடப் பயிற்சி 21
- ஆங்கில பாடப் பயிற்சி 22
- ஆங்கில பாடப் பயிற்சி 23
- ஆங்கில பாடப் பயிற்சி 24
- ஆங்கில பாடப் பயிற்சி 25
- ஆங்கில பாடப் பயிற்சி 26
- ஆங்கில பாடப் பயிற்சி 27
- ஆங்கில பாடப் பயிற்சி 28
- ஆங்கில பாடப் பயிற்சி 29
- ஆங்கில பாடப் பயிற்சி 30
- ஆங்கில பாடப் பயிற்சி 31
- ஆங்கில பாடப் பயிற்சி 32
- ஆங்கில பாடப் பயிற்சி 33

ஆங்கிலம் பேசுவது எப்படி?

- ஆங்கிலம் பேசுவது எப்படி? 1
- ஆங்கிலம் பேசுவது எப்படி? 2

ஆங்கிலம் துணுக்குகள்

- ஆங்கிலம் துணுக்குகள் 01
- ஆங்கிலம் துணுக்குகள் 02
- ஆங்கிலம் துணுக்குகள் 03
- ஆங்கிலம் துணுக்குகள் 04
- ஆங்கிலம் துணுக்குகள் 05
- ஆங்கிலம் துணுக்குகள் 06
- ஆங்கிலம் துணுக்குகள் 07
- ஆங்கிலம் துணுக்குகள் 08
- ஆங்கிலம் துணுக்குகள் 09
- ஆங்கிலம் துணுக்குகள் 10
- ஆங்கிலம் துணுக்குகள் 11
- ஆங்கிலம் துணுக்குகள் 12
- ஆங்கிலம் துணுக்குகள் 13
- ஆங்கிலம் துணுக்குகள் 14
- ஆங்கிலம் துணுக்குகள் 15
- ஆங்கிலம் துணுக்குகள் 16


PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

**என்.கே.அஷோக்பரன் said...**

என்னைப் பொறுத்த வரை அறிவைத் திருட முடியாது... மற்றது ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும் - மற்றவர் பதிவை களவெடுத்து அவனால் எத்தனை காலம் காலந்தள்ள முடியும்???
அவனுக்குப் பதிவிட ஆசை அதேவேளை சொந்தமாக எழுதும் அளவுக்கு அறிவோ ஆற்றலோ இல்லை அப்படியிருக்க அவன் என்ன செய்வான்??

ஜாவா ஸ்கிரிப்ட் போட்டு தடுத்தீர்களானால் ப்ரௌசரில் ஜாவா ஸ்கிரிப்டை டிஸேபிள் செய்துவிட்டு திருடுவான். திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. ஆகவே கவலைப் படாமல் உங்கள் பணியைத் தொடருங்கள் - உங்கள் அறிவு உங்களுடையது தான் அதனை யாராலும் திருட முடியாது.!

September 26, 2009 at 11:40 AM

**Arul said...**

you can report the duplicate content to google by mail not an e-mail.. here is the information

http://www.google.com/dmca.html

if any blog having all of ur posting without backlinks you can claim the ownership for that content to google...

http://googlewebmastercentral.blogspot.com/2006/12/deftly-dealing-with-duplicate-content.html

google will remove the blogs from search results...

http://www.copyscape.com/
is the good way to find ur duplicate blog posts...

Thanks
Arul

September 26, 2009 at 3:15 PM

**HK Arun said...**

அன்புடன் அருள்

வெட்டி ஒட்டுதலை தடைச்செய்தல் சரியான தெரிவல்ல. அவ்வாறு செய்தல் இத்தளத்தில் பாடங்களை வேர்ட் சீட்டில் வெட்டி ஒட்டி பயிற்சி செய்வோருக்கு பாதிப்பாகிவிடும். நாம் அவ்வாறு செய்ய விரும்பவில்லை.

ஆனால் ஒட்டு மொத்தமாக அனைத்து பதிவுகளையுமே சிலர் தமது தளங்களில் வெட்டி ஒட்டி மீள்பதிவிட்டு வருதலே வருத்தமான விடயமாகும். குறைந்த பட்சம் தளத்தின் பெயரையேனும் இட்டு மீள்பதிவிட்டிருந்தால் அதனை சற்று நாகரீகமானதாக கருதலாம்.

தவிர தமது பயிற்சிகாக எவர் வேண்டுமானாலும் வெட்டி ஒட்டி பயன்பெறலாம். நாம் அவற்றை தடை செய்ய விரும்பவில்லை.

நட்புடனான உங்கள் கருத்துக்கு நன்றி அருள்.

September 27, 2009 at 2:52 PM

**HK Arun said...**

அன்புடன் என்.கே.அஷோக்பரன்

இங்கே அறிவு என்பது நாம் கற்பாதாலும் அனுபவத்தாலும் கிடைக்கப்பெறுபவைகளே. நாமும் பல்வேறு தளங்களில் இருந்து பலதையும் கற்றுக்கொண்டுதான் இருக்கின்றோம்.


- ஆங்கிலம் துணுக்குகள் 17
- ஆங்கிலம் துணுக்குகள் 18
- ஆங்கிலம் துணுக்குகள் 19
- ஆங்கிலம் துணுக்குகள் 20
- ஆங்கிலம் துணுக்குகள் 21
- ஆங்கிலம் துணுக்குகள் 22
- ஆங்கிலம் துணுக்குகள் 23


**ஆங்கிலம் அட்டவணைகள்**


- Glossary of Computer Terms
- அட்டவணை Common/Proper
- அட்டவணை Countable/Un
- அட்டவணை Infinitive + s/es
- அட்டவணை Irregular verbs
- அட்டவணை Prepositions
- இந்தியா Career Path Table
- உடல் உறுப்புகள் Body parts
- கணினி கலைச்சொற்கள்
- சமையல் (List of Provisions)
- பழங்கள் List of Fruits
- மரக்கறிகள் List of Vegetables


**ஆங்கில ஆக்கங்கள்**


- அமெரிக்க ஆங்கில வரலாறு
- அயெல்ஸ் அனைத்துலத் தேர்வு
- அறிமுகம் - நல்வரவு
- ஆங்கில உச்சரிப்புப் பயிற்சி
- ஆங்கில ஒலிக்குறிகள்
- ஆங்கில சொற்கள் எண்ணிக்கை
- ஆங்கில பிடிஎப் கோப்புகள்
- ஆங்கில மொழி வரலாறு
- ஆங்கிலம் மென்பொருள்
- ஆங்கிலம்: இணைப்பு நிரல்கள்
- ஆங்கிலம்: உதவிக்குறிப்புகள்
- இரண்டாம் ஆண்டு நிறைவு
- எமது பாடத்திட்டம்
- மீள்பதிவிடுவோர் கவனத்திற்கு
- முதலாம் ஆண்டு நிறைவு
- மொழிப்பெயர்ப்பு விளக்கம்


**English Grammar Lessons**


- Abbreviations and Acronyms
- Articles
- can / be able to
- can and could
- Common Nouns / Proper Nouns
- Computer Acronyms
- could , was / were able to


PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!
PDFmyURL

நான் இங்கே கூறுவது ஒரு படைப்பாளியில் ஆக குறைந்த உரிமம் ஆன அவரது பதிவு மீள்பதிவிடும் போது தளத்தின் பெயரை கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்பதே.

அளிப்புரிமையின் (Copyleft) கீழ் தமது ஆக்கங்களை அளிப்பவர்களால் கூட தமது ஆக்கங்கள் வேறு ஒரு நபரின் பெயரில் மீள்பதிவிடப்படுவதையோ, பதிவுகள் சிதைக்கப்படுவதையோ ஏற்க முடிவதில்லை. இங்கே அளிப்புரிமை, பதிப்புரிமை இவைகளுக்கு அப்பால் பதிவுகள் சிதைந்த நிலையில் (எவரும் பயன்பெற முடியாத வகையில்) வெட்டி ஒட்டப் படுதலையும் குறிப்பிட்டுள்ளேன். மற்றும் ஒட்டு மொத்த பதிவுகளும் வேறு தளங்களில் இடம் பெறுவதால் கூகிள் யாஹூ போன்ற தேடுதளங்களின் ஊடாக எமது தளத்தை அனுக முயல்வோருக்கு இம்மீள்பதிவுகள் திசைத்திருப்பிகளாகவும் அமைந்து விடுகின்றன. இது நியாயமற்றது.

பி.கு: உங்களை இலங்கைப்பதிவர் சந்திப்பில் பார்க்கக்கிடைத்தது. (நிழல்படங்களில் தான்.) வருகைக்கு மகிழ்ச்சி.

September 27, 2009 at 3:04 PM

---

**HK Arun said...**

அன்புடன் அருள்

http://www.copyscape.com தளம் அனைத்து மீள் பதிவுகளையுமே கண்டறிந்து காட்டக் கூடியதல்ல. அதேவேளை ஒரு பதிவின் தலைப்பை கூகிள் தேடியில் இட்டு பார்க்கும் போது கொபிஸ்கேப் காட்டித் தராத பல பதிவுகளைக் காணக்கூடியதாக இருக்கும். சிலநேரம் வெட்டி ஒட்டுவோரால் மீள்பதிவுகளின் தலைப்பு மாற்றப்படுவதனால், பதிவின் உள்ளடக்கங்களை இட்டு பார்த்தால் மேலும் பலவற்றை கண்டறியலாம்.

http://googlewebmastercentral.blogspot.com/2006/12/deftly-dealing-with-duplicate-content.html தளத்திற்கு அறிவித்துள்ளேன்.

தகவலுக்கு நன்றி

September 27, 2009 at 3:11 PM

---

**Asmath said...**

கண்ணிமைக்கும் நேரத்தில் கண்டுப்பிடிக்க கூடிய இணைய வலை அமைப்பிலேயே இத்தனை வெட்டு ஒட்டுகள் என்றால், வலையுலக செய்திகளை எந்தெந்த பத்திரிக்கைகள் பதிப்பகங்கள் தம்முடையது என காப்புரிமை இட்டு வெளியிட்டுக்கொள்கின்றனவோ?

September 27, 2009 at 3:37 PM

---

**HK Arun said...**

- Asmath

தெரியவில்லை. ஆனால் இருக்கலாம்.

நன்றி அஸ்மத்

September 27, 2009 at 10:23 PM

---

**Anonymous said...**

கூகிள் தேடல்களின் போது, தேடலுக்கு மிகவும் பொருத்தமான பதிவுகளையே கூகிள் காண்பிப்பான். ஒரு பதி வின் மூலப்பதிவு எது, நகல் பதிவு எது என்பதை கூகிள் நன்றாகவே அறிவான். நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

தவிர 'ஆங்கிலம்' என கூகிள் தேடினால் பல்லாயிரக்கான ஆங்கிலங்களில் உங்கள் தளமே முதல் தெரிவாக தெரிகின்றது. **Results 1 - 10 of about 17,200,000 for ஆங்கிலம். (0.40 seconds)**

September 27, 2009 at 10:32 PM


- Date and Time
- Future "going to"
- Future Continuous Tense
- Grammar Patterns 01
- Grammar Patterns 02
- Grammar Patterns 03
- Grammar Patterns 04
- Grammar Patterns 05
- Grammar Patterns 06
- Grammar Patterns 07
- Grammatical Person in English
- have / have got
- History of American English
- History of the English language
- How To Use Capital Letters
- IELTS Preparation
- Irregular verbs
- List of Prepositions
- May be able to
- Parts of Speech
- Passive Voice
- Past Continuous Tense
- Past Perfect Continuous
- Polite and More Polite
- Prepositions
- Prepositions of Place
- Prepositions of Time
- Present Continuous Tense
- Present Perfect
- Present Perfect Continuous
- Pronouns
- Should be able to
- Simple Future Tense
- Simple Past Tense
- Simple Present Tense
- there is
- Third Person Infinitive + s/es
- Types of Nouns
- Use a/an Vowels and Consonant
- was / were going to
- will be able to
- இறந்தக்கால தொடர்வினை
- எதிர்காலத் தொடர்வினை
- சாதாரண இறந்தக்காலம்
- சாதாரண எதிர்காலம் 01
- சாதாரண எதிர்காலம் 02
- சாதாரண நிகழ்காலம்
- நிகழ்காலத் தொடர்வினை


**DO YOU LIKE AANGILAM?**

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

**HK Arun** said...

- Anonymous

நன்றி அனானி

September 27, 2009 at 10:35 PM

---

**சந்ரு** said...

உங்கள் வலைப்பதிவு மூலம் நான் மட்டுமல்ல எனது நண்பர்கள் குடும்ப உறவினர்கள் என்று எல்லோரும் நன்மை அடைந்து வருகின்றனர். இன்று திருட்டு பதிவு செய்கின்ற பலர் இருக்கின்றனர். அவர்களின் பதிவு சுட்டியையும் குறிப்பிட்டிருக்கலாம்.

திருடராய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாதுதான்.

September 29, 2009 at 8:23 PM

---

**HK Arun** said...

வணக்கம் சந்ரு

//உங்கள் வலைப்பதிவு மூலம் நான் மட்டுமல்ல எனது நண்பர்கள் குடும்ப உறவினர்கள் என்று எல்லோரும் நன்மை அடைந்து வருகின்றனர்.//

மிக்க மகிழ்ச்சி

//இன்று திருட்டு பதிவு செய்கின்ற பலர் இருக்கின்றனர். அவர்களின் பதிவு சுட்டியையும் குறிப்பிட்டிருக்கலாம்.//

பல தளங்கள் காணப்படுகின்றன. அவற்றை இனங்காட்ட விரும்பவில்லை. கூகிளில் பதிவின் தலைப்புகளை இட்டால் காணலாம். சிலநேரம் ஆர்வத்தின் வெளிப்பாடாக செய்தவர்களும் இருக்கலாம். அறியாமல் செய்தவர்களும் இருக்கலாம். எனவே இதன் பிறகு இவ்வாறு நடவாமல் இருக்கவே இவ்வறிவிப்பு. அவசியம் கருதி மீள்பதிவிட விரும்புவோருக்கு எமது கொள்கையினை அறிவிக்கும் முகமான பதிவு.

நன்றி சந்ரு.

September 29, 2009 at 10:30 PM

---

**Krishna Prabhu** said...

அது எப்படி கொஞ்சம் கூட கூச்சம் இல்லாமல் அடுத்தவர்களுடையதை தனதாக பாவிக்கிறார்களோ தெரியவில்லை.அசிங்கத்தைப் பார்ப்பதைபோல் பார்ப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.

உங்கள் சேவையை தொய்வின்றித் தொடருங்கள். நன்றி...

October 1, 2009 at 12:48 PM

---

**HK Arun** said...

-கிருஸ்ண பிரபு

//அது எப்படி கொஞ்சம் கூட கூச்சம் இல்லாமல் அடுத்தவர்களுடையதை தனதாக பாவிக்கிறார்களோ தெரியவில்லை// இங்கே பாருங்கள்:
http://www.no1tamilchat.com/no1chat/index.php?PHPSESSID=10aabc3451e7a47ad79b5bc100848f03&topic=6495.0

இப்படியான வேலையை செய்யும் தளங்கள் நிறைவே உள்ளன.

இன்னும் சில தளங்கள் "நன்றி இணைய தமிழ் உலகம்" என்று இட்டுக்கொண்டு மீள்பதிவிடுகின்றன.




**Link to AANGILAM**

ஆங்கிலம் aangilam.blogspot.com

இத்தளத்திற்கு இணைப்பு வழங்குவதன் மூலம், ஆங்கிலம் கற்க விரும்பும் ஆர்வலர்களுக்கு நீங்களும் உதவலாம். கீழே உள்ள நிரல் துண்டை வெட்டி உங்கள் வார்ப்புருவில் (Cut > Paste) ஒட்டிவிடுங்கள். நன்றி!

```
<a
href="http://aangilam.blog
spot.com/"/><img
src="http://lh3.google.com
```

மேலும் இணைப்பு நிரல்கள்

**Since May 2010**

**15,735,764**

**AANGILAM Archive**

August (4)

THEFREEDICTIONARY

POWERED BY

IP2Map™ Map of Visitors Powered byIP2Location.com

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

கருத்துக்கு நன்றி நண்பரே!

October 1, 2009 at 1:45 PM

**கார்த்திகேயன் said...**

நன்றி இணைய தமிழ் உலகம் என்றோ, நன்றி இணையம் என்றோ இட்டுவிட்டு மீள்பதிவிடுவதும் முறையற்ற செயல்பாடுதான். இதனை இலங்கை தமிழ் வலைப்பதிவர் சந்திப்பில் கலந்துக்கொண்ட ஊடகவியல் கல்லூரி மாணவர்களிடம் முன்வைக்கப்பட்டது. மீள்பதிவிடும் பொழுது சக இணையத் தளத்தினர், ஊடகத்துறையினர் கட்டாயம் குறித்த பதிவு தளத்தின் URL வழங்குவது இன்றியமையாதது மட்டுமல்ல நாகரீகமானதும் ஆகும்.

October 1, 2009 at 3:53 PM

**HK Arun said...**

- கார்த்திகேயன்
//பதிவு தளத்தின் URL வழங்குவது இன்றியமையாதது மட்டுமல்ல நாகரீகமானதும் ஆகும்.//

இதனைத்தான் நானும் கூறுகின்றேன். உங்கள் கருத்தே எனது கருத்தும்.

நன்றி கார்த்திகேயன்

October 2, 2009 at 7:58 PM

**saisayan said...**

do your service ..... i know you doing hardwork for this blog... all the best brother....

May 6, 2010 at 4:22 AM

**HK Arun said...**

- saisayan

//do your service ..... i know you doing hardwork for this blog... all the best brother....//

கருத்துப் பகிர்வுக்கு நன்றி சகோதரரே!

July 3, 2010 at 9:56 PM

**chellappa said...**

Excellent and worthable job done. Keep it up. Will appreciate to have more lessons on Active vs Passive Voice and Direct vs Indirect speeches.

Chellappa

January 15, 2012 at 10:00 PM

# Post a Comment

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

Enter your comment...

Comment as: Google Accoun

Publish Preview

இந்த ஆங்கிலம் (AANGILAM) வலைத்தளத்தின், ஆங்கில பாடப் பயிற்சிகள் பலருக்கும் பயன்படவேண்டும் எனும் நன்நோக்கிலேயே பதிவிடப்படுகின்றன. இத்தளத்திற்கு நீங்கள் இணைப்பு வழங்குதல் மிகவும் வரவேற்கத்தக்கது. அது, ஆங்கிலம் அத்தியாவசியமாகிவிட்ட இக்காலக்கட்டத்தில் மேலும் பலருக்கு ஆங்கிலம் கற்றிட நீங்களும் உதவியதாக இருக்கும். அதேவேளை இத்தளத்தின் பாடப் பயிற்சிகளை பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், வலைப்பதிவுகள், மன்றங்கள், கருத்துக்களங்கள் போன்றவற்றில் நீங்கள் அறிமுகப் படுத்த விரும்புவதாயின், பாடத்தின் ஒரு பகுதியை மட்டும் இட்டு, குறிப்பிட்ட பாடத்திற்கான (**URL**) இணைப்பு வழங்குதல் நியாயமான செயற்பாடாகக் கருதப்படும். இணைய வழி அல்லாத செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் என்றால் கட்டாயம் எமது வலைத்தளத்தின் பெயரை **www.aangilam.org** குறிப்பிடல் வேண்டும். அத்துடன் (**aangilam** AT **gmail.com)** எனும் எமது மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ அல்லது குறிப்பிட்ட பாடத்தில் பின்னூட்டம் ஊடாகவோ அறியத்தருதல் வரவேற்கப்படுகின்றது. **அவ்வாறின்றி, பாடங்களை முழுதுமாக வெட்டி ஒட்டி, உள்ளடக்கங்களை மாற்றி பதிவிடல்/மீள்பதிவிடல்; நூல், மின்னூல், செயலி வடிவில் வெளியிடல் போன்றவை உள்ளடக்கத் திருட்டாகும். எனவே அவ்வாறு செய்யாதீர்கள்.** மேற்கூறியவை மட்டுமன்றி, எமது எழுத்துமூல அனுமதியின்றி, எவரும் எவ்விதமான வணிகப் பயன்படுத்துதலும் கூடாது. மேலும் இப்பாடங்கள் மேலும் மேம்படுத்தப்பட்ட நிலையில் **(விடுப்பட்ட பாடங்களுடன்)** நூல் வடிவில் விரைவில் வெளிவரும் என்பதனை அறியத் தருகின்றோம். அப்போது, அந்நூல் தொடர்பான அறிவித்தலை இத்தளத்தின் முகப்பில் காணலாம். நன்றி!

Copyright 2007-2018 © www.aangilam.org, All rights reserved.

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!